கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

மார்கழி மாத இதழ்
NEWS BULLETIN
DECEMBER 2025
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
	கொவன்றி தமிழ்மொழிக் கலைக் கழகம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் 45 BLONDVIL ST COVENTRY CV3 5EQ எனும் முகவரியில் நடைபெறுகின்றது
03/01/26	இரண்டாம் தவணை ஆரம்பம்
17/01/2026	தைப்பொங்கல் வழிபாடு
28/02/26	தமிழ்த்திறன் போட்டிகள் நடைபெறும்.

SATURDAYS	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	12.30pm – 2.30pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	12.30pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 5.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	12.30pm – 2.30pm
Free 11plus Verbal & Nonverbal Reasoning (Mrs. Gayathri Krish teacher)	2.00pm – 4.00pm
SUNDAYS	**Time**
Tamil	10.00am – 12.00pm
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 3.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	9.00am – 1.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	9.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	11.30am – 2.30pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	12.00am – 1.00pm
Free Miruthangam Online (Mr. Thillaiampalam Narendra teacher)	1.00pm – 3.00pm
Free 11plus Maths (Mr.Krish teacher)	9.00am – 11.00am



23 ஆவது ஆண்டு விழா

கொவன்றியில் 2002 ஆம் ஆண்டு முதல் முதலில் தமிழ் மக்களுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டுப் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் தனது பணிகளைச் செவ்வனச் செய்துவரும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் தனது 23 வது அகவை தினத்தை 06/12/2025 அன்று Coventry Community Resource centre ல் சிறப்பாகக் கொண்டாடியது.

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் சிவத்தமிழ் காவலர் கந்தையா அரியரத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் Hon. Cllr. Roger Bailey, Deputy Lord Mayor of Coventry அவர்கள் பிரதம விருந்தினராகவும், Cllr Mr. Jaswant Singh Birdi & Mrs Krishna Birdi, Mr Sangrappillai Murugaiah Dueputy Examiner for British Tamil Examination Board & Mrs Vasanthy Murugaiah, Mr. Joshep Vilvaraj Admin Officer of British Tamil Examination Board. ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



விருந்தினர்கள் உரையாற்றியதோடு, மாணவர்களுக்கு விருதுகளையும், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தனர். விருந்தினர்கள் அனைவரும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் சார்பில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.



மங்கள விளக்கினை விருந்தினர்கள், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர், அவரது துணைவியார் திருமதி சிமிதா அரியரத்தினம், தலைமை ஆசிரியை திருமதி ரஜனி உதயசேகரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.



அகவணக்கம், அனைத்து மாணவர்களதும் பாடசாலைக்கீதம், ஆகிய நிகழ்வுகளைத்



தொடர்ந்து, மறைந்த பிரித்தானிய தமிழ்மொழிப் பரீட்சைச் சபையின் தலைவர் அமரர் கணபதிப்பிள்ளை சிவகுருநாதபிள்ளை சிவா பிள்ளை அவர்களுக்கான மலரஞ்சலியும் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.





வரவேற்புரையினைக் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் மதிப்பிற்குரிய திரு கந்தையா அரியரத்தினம் ஐயா அவர்கள் நிகழ்த்தினார்.

கலை நிகழ்வுகளின் வரிசையிலே திருமதி கஜிதா இராஜேந்திரம், திருமதி யாழினி மகேந்திரன், திருமதி தீப்தி பிரவீன், திருமதி சரண்யா ஜெயக்குமார், செல்வி மதுமிதா சிங்கராசா ஆகிய ஆசிரியர்களின் பாலர் ஒன்று மாணவர்கள் வழங்கிய அகரவரிசைப் பாடல்களும்,



“தோ தோ நாய்க்குட்டி” அபிநயப் பாடலும்,



திருமதி வித்யாலஷ்மி பிரபுசங்கர், திருமதி ஆயிஷா ஹுசைன் ஆசிரியர்களின் பாலர் இரண்டு மாணவர்களின் “தமிழ் அன்னை வருகை” நாடக நிகழ்வும்,



நடன ஆசிரியை “நாட்டியகலாநிபுண” “நுண்கலைமானி” ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் ஆசிரியையின் மாணவர்கள் “கோகுலத்து பசுக்கள்” என்ற பாடலுக்கான நடனமும்



நிலா காய்கிறது” என்ற பாடலுக்கான நடனமும்,

3 “அழகு தெய்வமாக” என்ற பாடலுக்கான நடனமும்,



திருமதி சிவாஜினி அமலதாஸ், திருமதி ரஜனி கோபாலகிருஷ்ணன் ஆசிரியர்களின் வகுப்பு 1 மாணவர்கள் வழங்கிய “ஓடி விளையாடு பாப்பா” அபிநய நிகழ்வும்,



திருமதி புஷ்பா தவத்துரை, திருமதி சுனித்திரா கேதீஸ்வரராஜா ஆசிரியர்களின் வகுப்பு 2 மாணவர்கள் வழங்கிய “சுயசரிதை கூறுவோம்” நாடக நிகழ்வும்,



சங்கீத ஆசிரியை “நுண்கலைமானி” ஸ்ரீமதி வானதி சுரேஷ்குமார் அவர்களின் மாணவிகள் வழங்கிய பாடல்களும்,





திருமதி இமையாளினி ஜெயதீஸ்வரன், திருமதி பிரதீபா கோகிலநாதன் ஆசிரியர்களின் வகுப்பு 3 மாணவர்கள் வழங்கிய “காட்டு விலங்குகளும் அவற்றின் ஒற்றுமையும்” என்ற நாடகமும்,

திருமதி யோகலட்சுமி குணேஸ்வரன், திருமதி பிரபாநந்தினி ரமேஷ் ஆசிரியர்களின் வகுப்பு 4 மாணவர்கள் வழங்கிய “ஒற்றைச் சிலம்பு” என்ற சிலப்பதிகார நாடகமும்,



வயலின் ஆசிரியை “கலாஜோதி” செல்வி வாரணி சரவணதாசன் அவர்களின் மாணவர்களின் வயலின் இசைக்கு, மிருதங்க ஆசிரியர் “வாத்திய சுதாகர” திரு மயில்வாகனம் விஜயராஜா அவர்களின் பக்கவாத்திய மிருதங்க இசையும்,



திருமதி கமலினி பகீஸ்வரன் ஆசிரியரின் ஞாயிற்றுக்கிழமை தமிழ் வகுப்பு மாணவர்கள் வழங்கிய “தமிழ் வளர்த்த பெரியார்கள்” நிகழ்வும்,



திருமதி ஜெயதேவி சிவநேசன் ஆசிரியரின் வகுப்பு 5 மாணவர்கள் வழங்கிய “தொழில்நுட்பம் ஆசீர்வாதமா அல்லது சாபமா” என்ற தலைப்பிலான பட்டிமன்றமும்,



சுரத்தட்டு ஆசிரியை “கலாஜோதி” செல்வி ரி.ஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவர்கள் வழங்கிய சுரத்தட்டு இசையும்,





சுரத்தட்டு இசைக்கு திரு ஸ்ரீநாதன் பகீரதன் வழங்கிய தபேலா பக்கவாத்திய இசையையும்,



திருமதி கலைமதி விஜயரட்ணம் ஆசிரியரின் வகுப்பு 6 மாணவர்களின் “விவசாயம் காப்போம் இயற்கை வளங்களைப் பேணுவோம்” என்ற தலைப்பிலான கவியரங்கமும்,



தற்காப்புக் கலை (கராத்தே) ஆசிரியர் திரு பிரதித் பீரிஸ் அவர்களின் மாணவர்கள் வழங்கிய தற்காப்புக் காட்சிகளும்,





திருமதி ஜெயரதி வரதராஜா, திருமதி ரஜனி உதயசேகரன் ஆசிரியர்களின் வகுப்பு 7 மாணவர்கள் வழங்கிய “நாட்டு நடப்பு” வில்லுப்பாட்டும்,



சங்கீத ஆசிரியர் “இசைவாணர்” “கானகலாதர” “சங்கீத கலாநிபுண” திரு தீனதயாளன் பத்மநாதன் ஆசிரியரின் மாணவர்களின் பாடல்களுக்கு, மிருதங்க ஆசிரியர் “வாத்திய சுதாகர” திரு மயில்வாகனம் விஜயராஜா அவர்களின் பக்கவாத்திய மிருதங்க இசையும்,





திருமதி ரஜனி யேசுராசா ஆசிரியரின் வகுப்பு 8 மாணவர்கள் வழங்கிய “ஐம்பூதங்கள்” என்ற தலைப்பில் வழக்காடு மன்றமும்,




வீணை ஆசிரியை “கலாஜோதி” செல்வி வாரணி சரவணதாசன் அவர்களின் மாணவர்களின் வீணை இசைக்கு, மிருதங்க ஆசிரியர் “வாத்திய சுதாகர” திரு மயில்வாகனம் விஜயராஜா அவர்களின் பக்கவாத்திய மிருதங்க இசையும்,



திருமதி பாயிஷா அபுசாலி, திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன் ஆசிரியர்களின் வகுப்பு 9, வகுப்பு 10 மாணவர்கள் வழங்கிய "கொவன்றியில் திருவிளையாடல்" என்ற நாடகமும்,



நடன ஆசிரியை "பரதக்கலா வித்தகர்" "நாட்டிய கலாநிபுண" "கலைமானி" ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகள் வழங்கிய "தசாவதாரம்" நாட்டிய நாடகமும்,



"மாடு மேய்க்கும் கண்ணே" பாடலுக்கான நடனமும்,



சண்முக கௌத்துவம் நடனமும் அன்றைய நிகழ்வுகளை அலங்கரித்தன.



வழமை போல் இந்த வருடமும் சிறந்த மாணவர்களுக்கான வெற்றிக் கேடயங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. தமிழ்ப் பாடத்திலே சிறந்த மாணவியாகச் செல்வி லக்ஸ்மிதா உருத்திரன் அவர்களும், கலைப்பாடத்திலே சிறந்த மாணவியாக செல்வி மகீபா ஆரோக்கிய ஜெயக்குமார் அவர்களும்,



தமிழ் மற்றும் கலைப் பாடங்கள் இரண்டிலும் சிறந்த மாணவியாகத் தெரிவுசெய்யப்பட்டு, திரைப்பட இயக்குனர் ஸ்ரீதர் ஞாபகார்த்த சுழற்சிக் கேடயத்தையும், கோபுரத்தையும் செல்வி ஜெனிஷ்கா சிவா அவர்களும், கராத்தே கலையில் சிறந்த விருதை செல்வி அனுசியா பீரிஸ் அவர்களும் பெற்றுக்கொண்டனர்.



சிறுவயது முதல் தமிழ்ப் பாடசாலையில் தமிழ் பயின்று, Oxford Cambridge (OCR) பரீட்சைச் சபைகளின் GCSE சாதாரண தரத்தில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றதோடு, உயர்தரத்திலும் தோற்றிச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.



அதேபோல், GCSE சாதாரண தரத்தில் தோற்றிச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.



சிறுவயது முதல் பரதநாட்டியத்தை தமிழ்ப் பாடசாலையில் முறைப்படி பயின்று, OFAAL பரீட்சைச் சபையின் பரீட்சைகளில் தோற்றி Diploma வை நிறைவு செய்த மாணவர்கள் ஆசிரியர்களைக் கௌரவித்தார்கள். மிருதங்க ஆசிரியர் "வாத்திய சுதாகர" திரு மயில்வாகனம் விஜயராஜா அவர்கள் நலன்புரிச் சங்கத்தால் கௌரவிக்கப்பட்டார்.





மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டிகளாக திகழ்ந்து, அவர்களை நல்வழிப்படுத்திய

அனைத்து ஆசிரியப் பெருந்தகைகளையும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் அந்த மேடையில் கௌரவித்ததோடு, மனமார்ந்த நன்றிகளையும், அன்போடு பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டது.



ஆண்டுவிழா நிகழ்வுகளை திரு ஸ்ரீநாதன் பகீரதன், திரு அபிலன் விஜயரட்ணம், செல்வி நர்மிதா சந்திரமோகன், செல்வி சாருகா ஜெயசங்கர், செல்வி லக்ஸ்மிதா உருத்திரன் ஆகியோர் தொகுத்து வழங்கியிருந்தார்கள்.





கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் திரு ஸ்ரீநாதன் பகீரதன் அவர்களின் நன்றியுரையோடு, ஆண்டுவிழா இனிதே நிறைவு பெற்றது.

கலந்துகொண்ட வெளிநிகழ்வு.

Singing For The Brain அமைப்பினர் Massey Ferguson social club, Broadlane Coventry ல் நடாத்திய நிகழ்வில் கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியர்களில் ஒருவரான "பரதக்கலா வித்தகர்" "நாட்டிய கலாநிபுண" "கலைமானி" ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகளான செல்விகள் ஜெனிஷ்கா சிவா, ஆரதி சியாமளன், அர்ச்சனா ரமணன், வைஷாலி காண்டீபன், ஜேர்த்திகா ஜெயதீஸ்வரன் ஆகியோர் மிகவும் சிறப்பான நடனத்தை வழங்கியதன் மூலம் பார்வையாளர்களினால் எழுந்து நின்று வழங்கப்பட்ட கரகோஷத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.



நத்தார்க் கொண்டாட்டம்

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் நத்தார்க் கொண்டாட்டம் 20/12/2026 மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் நத்தார்ப் பாப்பாவின் வருகை, ஆடல் பாடல் என மிக அமர்க்களமாக நடைபெற்றது.

தமிழ்ப் பாட ஆசிரியை திருமதி சிவாஜினி அமலதாஸ், பெற்றோர் திரு துரைராஜா கிருஷ்ணராஜன் ஆகியோர் பாலன் பிறப்பு பற்றிய கருத்துரைகளையும், சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரி.ஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவர்கள் செல்வன்களான சஜித் கேதீஸ்வரன், விஷால் காண்டீபன், அனுஜன் ஜெயசங்கர் ஆகியோர் சுரத்தட்டு இசையையும் வழங்கியிருந்தனர்.



